63

copy

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - பணியிடை காலமான அரசு ஊழியர் திரு.G.மணிகண்டன் என்பவரின் மனைவி திருமதி.த.லட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டது - தட்டச்சர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை**

அரசாணை (ப) எண். 208

நாள்: 11. 10. 2022
சுபகிருது ஆண்டு
புரட்டாசி 24 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.பமே/எ2/4844/2022, நாள்.10.06.2022.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

********

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டம், ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலராக பணிபுரிந்தபோது 31.12.2017 அன்று பணியிடைக்காலமான திரு.G.மணிகண்டன் என்பவரது மனைவி திருமதி. த. லட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 06.02.2020 முற்பகல் முதல் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது தட்டச்சர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

த.பி.பா.

2. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் வழங்கப்பட்டு, பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும், திருமதி. த.லட்சுமி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 06.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் திருமதி. த.லட்சுமி தட்டச்சர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா.எண்.14880/ட்டி1/2022, நாள்.10.08.2022 மற்றும் அ.சா.எண்.2966051/G2/2022, நாள். 26.08.2022- இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
√திருமதி. த.லட்சுமி, தட்டச்சர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை – 600 005.
(பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
மாவட்டக் கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008.

நகல்:-
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/10/2022
பிரிவு அலுவலர்.

அரசாணை நகல் பெற்றுக்கொண்டேன்.
T. Lakshmi
12/10/22